# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 97** **நாள்: 09.09.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சி, தொற்றுநோய் மருத்துவமனையில் இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சி வகுப்பிற்கு மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர். முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி,பொது சுகாதாரத்துறையின் கீழ் இயங்கும் தொற்றுநோய் மருத்துவமனையில் இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சி வகுப்பிற்கு மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர். முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் 2017–18 ஆம் ஆண்டிற்கான மருத்துவ இணையியல் படிப்பான இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சி (ANM Course) பயிற்சி தொடங்கப்பட உள்ளது. இவ்வாண்டு 40 மாணவிகளுக்கான சேர்க்கை நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் சேர பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும், அரசு மற்றும் அரசு சார்ந்த, பொது பள்ளிகளில் பயின்ற மாணவிகளும் விண்ணப்பிக்கலாம். உதவி செவிலியர் பயிற்சிக்கு (ANM Course) (+2 –வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) ரூ.50 செலுத்தி நேரடியாக விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் இயக்குநர், தொ.நோ.ம.மனை எண்.187, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை, சென்னை– 600 081–ல் உள்ள தொற்றுநோய் மருத்துவமனை அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 16.08.2017 முதல் 31.08.2017 வரை மாலை 4.00 மணிக்குள் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 04.09.2017 அன்று மாலை 4.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

மேலும், விபரங்களுக்கு 044 – 2591 2686 என்ற தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு தெரிந்துக்கொள்ளலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**